ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா₃ந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ ஹ்ருதி₃ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ மூவரில் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ மூவரில் ॥

## திருமாலிருஞ்சோலை - 2

‡மூவரில் முன் முதல்வன்⋆ முழங்கார் கடலுள் கிடந்து⋆
பூவலருந்தி தன்னுள்⋆ புவனம் படைத்துண்டுமிழ்ந்த⋆
தேவர்கள் நாயகனை⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
கோவலர் கோவிந்தனைக்⋆ கொடியேர் இடை கூடுங்கொலோ (1)

‡புனை வளர் பூம் பொழிலார்⋆ பொன்னி சூழ் அரங்க நகருள்
முனைவனை⋆ மூவுலகும் படைத்த⋆ முதல் மூர்த்தி தன்னை⋆
சினை வளர் பூம் பொழில் சூழ்⋆ திருமாலிருஞ்சோலை நின்றான்⋆
கனை கழல் காணுங்கொலோ⋆ கயல் கண்ணி எம் காரிகையே (2)

உண்டுலகேழினையும்⋆ ஒரு பாலகன் ஆலிலைமேல்⋆
கண் துயில் கொண்டுகந்த⋆ கரு மாணிக்க மாமலையை⋆
திண் திறல் மாகரி சேர்⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
அண்டர் தம் கோவினை இன்று⋆ அணுகும்கொல்
என்னாயிழையே (3)

சிங்கமதாய் அவுணன்⋆ திறல் ஆகம் முன் கீண்டுகந்த⋆
பங்கய மாமலர்க் கண்⋆ பரனை எம் பரஞ்சுடரை⋆
திங்கள் நல் மாமுகில் சேர்⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
நங்கள் பிரானை இன்று⋆ நணுகும்கொல் என்நன்னுதலே (4)

தானவன் வேள்வி தன்னில்⋆ தனியே குறளாய் நிமிர்ந்து⋆
வானமும் மண்ணகமும்⋆ அளந்த திரிவிக்கிரமன்⋆
தேன் அமர் பூம் பொழில் சூழ்⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
வானவர் கோனைய் இன்று⋆ வணங்கித் தொழ
வல்லள் கொலோ (5)

‡நேசம் இலாதவர்க்கும்⋆ நினையாதவர்க்கும் அரியான்⋆
வாச மலர்ப் பொழில் சூழ்⋆ வட மாமதுரைப் பிறந்தான்⋆

தேசம் எல்லாம் வணங்கும்⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
கேசவ நம்பி தன்னைக்⋆ கெண்டை ஒண் கண்ணி
காணும்கொலோ (6)

புள்ளினை வாய் பிளந்து⋆ பொருமா கரி கொம்பொசித்து⋆
கள்ளச் சகடுதைத்த⋆ கரு மாணிக்க மாமலையை⋆
தெள்ளருவி கொழிக்கும்⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
வள்ளலை வாள் நுதலாள்⋆ வணங்கித் தொழ வல்லள்கொலோ (7)

‡பார்த்தனுக்கன்றருளிப்⋆ பாரதத்தொரு தேர் முன்னின்று⋆
காத்தவன் தன்னை⋆ விண்ணோர் கரு மாணிக்க மாமலையை⋆
தீர்த்தனைப் பூம் பொழில் சூழ்⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
மூர்த்தியைக் கை தொழவும்⋆ முடியும்கொல் என் மொய்
குழற்கே (8)

‡வலம்புரி ஆழியனை⋆ வரையார் திரள் தோளன் தன்னை⋆
புலம்புரி நூலவனைப்⋆ பொழில் வேங்கட வேதியனை⋆
சிலம்பியல் ஆறுடைய⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
நலம் திகழ் நாரணனை⋆ நணுகும்கொல் என் நல் நுதலே (9)

‡தேடற்கரியவனைத்⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
ஆடல் பறவையனை⋆ அணியாயிழை காணும் என்று⋆
மாடக் கொடி மதிள் சூழ்⋆ மங்கையார் கலிகன்றி சொன்ன⋆
பாடல் பனுவல் பத்தும்⋆ பயில்வார்க்கில்லை பாவங்களே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥